புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜுன் 01, 2023 • புரட்சி 23 • முழக்கம் 20 • விலை ரூ.3.00

# தமிழ்நாட்டு “ஆவினை” குஜராத் அமுல் விழுங்க சதித் திட்டம்

தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக ஆட்சி, தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்டுவரும் ஆவின் பால் நிறுவனத்தை சீர்குலைத்து - குஜராத் “அமுல்” பாலை விற்க சதித்திட்டம் தீட்டிவருகிறது. தமிழக முதல்வர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடிதம் எழுதியிருக்கிறார்.

ஆவினில் தயிர் பெயரை ‘தஹி’ என்று மாற்றுவதற்கு ‘நஹி’ என்று கூறி எதிர்ப்பு தெரிவித்ததால், புதிய வழியில் குஜராத்தின் அமுல் நிறுவனம் மூலம் தமிழ்நாட்டில் பொதுமக்களிடம் இருந்து பாலை கொள்முதல் செய்வதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதேநேரத்தில், கர்நாடகாவை தொடர்ந்து தமிழகத்திலும் அமுல் பால் (தூத்) தொழில் தொடங்க கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்தநிலை நீடித்தால் கிராம பொருளாதாரம் முற்றிலும் அழிந்துவிடும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தமிழகத்தில் உள்ள ஊரக பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதார நிலையைக் கருத்தில் கொண்டும் அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், மாநிலத்தில் உள்ள நுகர்வோர்களுக்கு சரியான விலையில் தரம் மற்றும் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்ட பால் மற்றும் பால் பொருட்கள் கிடைக்க செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு லிமிடெட் (TCMPF) 1.2.1981ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

இது ஒரு வணிக நிறுவனமாக மட்டுமல்லாமல் சமூக இயக்கமாகவும் இயங்கி வருகிறது. ஆவின் நிறுவனம் தலைமை கூட்டுறவு விற்பனை இணையமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில், ஆவின் கூட்டுறவு இணையத்தின் கீழ், 9,673 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அச்சங்கங்கள் நாளொன்றுக்கு 35 லட்சம் லிட்டர் பாலினை 4.5 லட்சம் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்து வருகிறது. அதை இந்த ஆண்டு 70 லட்சம் லிட்டராக உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளது. இதன் வாயிலாக, பால் உற்பத்தியாளர்களுக்கு ஆண்டு முழுவதும் லாபகரமான மற்றும் சீரான விலை கூட்டுறவு சங்கங்களால் உறுதி செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழகத்தில் அமுல் பாலை விற்பனை செய்ய போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்காக குஜராத் சொசைட்டியின் கீழ் இயங்கக்கூடிய அமுல் நிறுவனம், தமிழகத்தில் வந்து பால் கொள்முதல் செய்கிறார்கள். குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பால் குளிரூட்டும் மையம் மற்றும் பதப்படுத்தப்படும் நிலையம் நிறுவியுள்ளது. மேலும் தர்மபுரி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள், சுய உதவி குழுக்கள் மூலமாக பால் கொள்முதல் செய்ய திட்டமிட்டுள்ளது.

அமுல் உற்பத்தியாளர்கள் அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். அதிக விலை கொடுத்து வாங்கினால் அதிக விலைக்கு தான் விற்க வேண்டும். குறைந்தது ரூ.10 முதல் ரூ.20 வரை விலையை உயர்த்தி விற்பார்கள். அதையும் வாங்க பலர் உள்ளனர். லாபம் அதிகரிக்கும்போது அதிக விலை கொடுத்து பாலை கொள்முதல் செய்கின்றனர். இதனால் அமுலை நோக்கி பால் உற்பத்தியாளர்கள் போக ஆரம்பிப்பார்கள். இங்குள்ள கூட்டுறவு சொசைட்டிகள் அழிவுக்கு இது காரணமாகி விடும். மேலும், பால் உற்பத்தியை பெருக்க தமிழ்நாடு அரசு மற்றும் கூட்டுறவு வங்கிகள் மாடு வாங்க சலுகைகள் வழங்குகின்றன.

பல நலத்திட்டங்கள் வழங்கும்போது மாடுகளையும் இலவசமாக வழங்குகின்றனர். ஆனால் அரசின் சலுகையால் பெறப்படும் கறவை மாடுகள் மூலம் வரும் பால் அமுலுக்கு செல்லும் நிலை உருவாகும். இதுவும் கூட்டுறவு சொசைட்டிகளின் அழிவுக்கு ஒரு காரணமாகி விடும். அதேநேரத்தில் பால் கொள்முதலை அதிக விலை கொடுத்து வாங்கினாலும், குறைந்த விலைக்கு விற்க வேண்டும் என்ற சேவை மனப்பான்மை என்பது தான் ஆவினின் கொள்கை. அந்த எண்ணமே முற்றிலும் பாதிக்கப்படும். அமுல் நிறுவனம் லிட்டருக்கு ரூ.2, ரூ.4 என்று அதிகம் கொடுத்து பாலை கொள்முதல் செய்வதாக சொல்கிறார்கள்.

இதனால் பால் கொள்முதல் செய்பவர்கள் அவர்கள் பக்கம் செல்ல வாய்ப்பு உள்ளது. அதேநேரத்தில் எந்த லாப நோக்கமும் இல்லாமல் மக்களுக்கு சேவையாற்றி வரும் ஆவின் சேவை என்பது மிகவும் பாதிக்கப்படும். அப்படி செயல்படும் பட்சத்தில் ஆவின் நிறுவனம் அழிவை சந்திக்கும். அவ்வாறு ஆவின் நிறுவனம் அழிந்தால், குறைந்த விலைக்கு பால் கிடைக்காது. இதனால் பல லட்சம் மக்கள் பாதிக்கப்படுவார்கள். இதனால் மற்ற மாவட்டங்களில் பால் விற்பனை பாதிக்கும். மற்ற மாவட்டங்களில் கொள்முதல் பாதித்தால் அங்கும் பல லட்சம் மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

இதனால் மாநிலங்களில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் மக்களுக்காக நடத்தப்படும் நிறுவனங்கள் மற்ற மாநிலங்களில் தொடங்கக் கூடாது என்பது எழுதப்படாத விதியாக உள்ளது. ஆனால் அந்த கோட்பாட்டை மீறி, குஜராத் நிறுவனம் தமிழகத்தில் கால் பதித்துள்ளது. இது தமிழகத்தின் கிராம பொருளாதாரத்தை முற்றிலும் அழித்து விடும் செயல் என்பதால் பல்வேறு எதிர்க்கட்சிகள் இதை கண்டித்து வருகின்றனர். ஆவின் தயிர் பாக்கெட்டில் தயிர் என்ற வார்த்தையும், curd என்ற ஆங்கில வார்த்தையும் பயன்படுத்தப்படுகிறது.

இதில், ஆங்கில வார்த்தையை நீக்கி விட்டு ‘தஹி’ என்ற இந்தி வார்த்தையை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 1ம் முதல் பயன்படுத்த வேண்டும் என்று ஒன்றிய அரசு அறிவித்தது. இதற்கு தமிழ்நாடு அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. தஹிக்கு ‘நஹி’ என்று கூறி விட்டது. இதனால், நீங்கள் ஆவின் மூலம் பெயர் போடாவிட்டால் என்ன? குஜராத்தில் தயாரிக்கப்படும் அமுலை கொண்டு வந்து இந்தியில் பெயரிட்டு நாங்கள் விற்பனை செய்வோம் என்று மறைமுகமாக இதுபோன்ற செயல்களில் குஜராத் நிறுவனம் இயக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அந்த பால் மீது மக்களுக்கு நம்பிக்கை உள்ளது. அமுல் விற்பனையை தொடங்கியதால் அங்கு எதிர்ப்பு கிளம்பியது. காங்கிரஸ் இதை தேர்தல் பிரசாரமாகவே செய்தார்கள். இதனால் மக்கள் பாஜகவை எதிர்த்து ஓட்டு போட்டார்கள். இதனால், தற்போது அமுல் பால் கர்நாடகாவிலும் நுழைய முடியாத சூழ்நிலை உள்ளது. கர்நாடகாவில் எதிர்ப்பு கிளம்பியதால் தமிழகத்தில் நுழைய பார்க்கிறார்கள்.

## வினா விடை

- *சர்வதேச நாடுகள் நெருக்கடியான சிக்கல்களுக்கு தீர்வுகாண இந்தியாவையே நாடு கின்றன.* – **ஆளுநர் தமிழிசை**

*உண்மை தான் நெருக்கடிகளை திசைதிருப்பி மக்களை ஏமாற்ற இங்கே இலவச ஆலோசனைகள் வண்டி வண்டியாக கிடைக்கும்.*

- *கோவிந்தராஜர் ஸ்ரீதேவி பூதேவியுடன் திருப்பதியில் கற்பக விருட்ச வாகனத்தில் வீதி வீதியாக உலா வந்தார்* – **செய்தி**

*கற்பக விருட்சம் எந்த நிறுவனத்தின் தயாரிப்பு? பெட்ரோல் வண்டியா? டீசல் வண்டியா?*

- *கிரிமினல் குற்றங்களில் ஈடுபடும் பாஜக அணிகளின் தலைவர்களை மாவட்ட தலைவர்கள் கண்காணிக்க வேண்டும்* – **அண்ணாமலை**

*அவர்களின் பட்டியலை வைத்து கட்சியில் பதவி உயர்வு வழங்கி கவுரவிக்க உதவியாக இருக்கும், அதனால் தான்!*

- *தீட்சிதர்கள் நடத்திய குழந்தை திருமண படங்கள் பத்திரிக்கைகளில் வெளிவந்துள்ளன* – **செய்தி**

*அதனால் என்ன? அவர்கள் கைலாயத்தில் இருந்து சிவ பெருமானோடு வந்த பூ தேவர்கள். இந்தியாவின் சட்டங்கள் அவர்களுக்கு பொருந்தாது, சந்தேகம் என்றால் ஆளுநரைக் கேட்டுக் கொள்ளுங்கள்.*

தலையங்கம்

# செங்கோல் நாடகம்

டெல்லி புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் சபாநாயகர் இருக்கைக்கு அருகே சோழர் கால செங்கோலை நிறுவி இருப்பதாக ஒன்றிய ஆட்சி கூறுகிறது. மோடி புதிய நாடாளுமன்ற திறப்பு விழாவை ஒரு மதச் சடங்காக மாற்றி இருக்கிறார், பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த குடியரசு தலைவர் திரௌபதி முர்முவுக்கு இந்த நிகழ்ச்சிக்கு அழைப்பிதழ் கூட அனுப்பப்படாமல் அவமானபடுத்தப்பட்டிருக்கிறார்.

அவர் ஏன் அவமதிக்கப்பட்டார் என்பதற்கு மூன்று காரணங்கள் உண்டு. ஒன்று அவர் ஒரு பெண்; இரண்டு அவர் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர்; மூன்றாவது கணவனை இழந்தவர்; பார்ப்பனிய தர்மப்படி வேதச் சடங்குகளில் இவர் பங்கேற்க முடியாது எனவே தான் அவர் இந்த புறக்கணிப்புக்கு உள்ளாகி இருக்கிறார். திறப்பு விழாவுக்கு தேர்வு செய்யப்பட்ட நாள் சாவர்க்கர் பிறந்தநாள், சாவர்க்கர் மனுஸ்மிருதியை இந்தியாவின் புனிதமான இந்துக்களின் வழிகாட்டும் நூல் என்று பெருமைப்படுவதோடு எழுத்துப்பூர்வமாகவும் பதிவு செய்துள்ளார் (Women in Manushmirthi - Volume 4, Prabhat Publishers) மனுஸ்மிருதிப்படி ஒரு பெண் கணவனை இழந்தவர் குடியரசுத் தலைவராக இருந்தாலும் அதுவும் மனுநீதிப்படி வேத சடங்குகளில் புறக்கணிக்கப்பட வேண்டியவர் தான் என்பதை மோடி ஆட்சி இதன் மூலம் உறுதிப்படுத்தி இருக்கிறது. அதோடு திறப்பு விழா மோடி என்ற இந்து மன்னருக்கு முடிசூட்டும் விழாவாக மாற்றப்பட்டுள்ளது. 20 எதிர்க்கட்சிகள் இந்த விழாவை புறக்கணித்து விட்டன, இந்த பிரச்சனைகளை திசை திருப்புவதற்கு செங்கோல் வழங்கும் நாடகம் ஒன்றை அரங்கேற்றியுள்ளார்கள். அதற்கு புதிய கற்பனை கதைகளையும் உருவாக்கி இருக்கிறார்கள்.

இந்த செங்கோல் நாடகத்திற்கு தமிழ்நாட்டின் ஆளுநர் தனது மாளிகையில் கொண்டாட்டம் ஒன்றை நடத்தி இருக்கிறார். அதில் அவர் பேசுகிறபோது மவுண்ட் பேட்டனுக்கு செங்கோல் தன்னிடம் வழங்கப்பட்டது நன்றாகவே தெரியும். இது ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் மவுண்ட் பேட்டன் வெளியேறியதற்கு பிறகு நம்மிடையே நடந்த சாதி, இன, மத மோதல்கள் காரணமாக அந்த ஆவணங்களை தொலைத்து விட்டோம் என்று ஒரு கதையை அவிழ்த்து விட்டு இருக்கிறார். செங்கோல் வழங்கப்பட்டது அவருக்கு நன்றாகவே தெரியும் என்பது ஆளுநருக்கு எப்படி தெரிந்தது? ஆளுநர் ரவியின் கனவில் வந்து சொன்னாரா? அப்பட்டமான பொய். இது குறித்து தீக்கதிர் நாளேடு விரிவான கட்டுரை ஒன்றை ஆதாரங்களுடன் வெளியிட்டு இருக்கிறது. இந்தியாவில் ஆட்சி மாற்றம் குறித்து Transfer of Power in India என்ற நூல் வி.பி. மேனன் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. ஆட்சி மாற்றத்தின் போது ஒவ்வொரு தருணமும் இதில் விரிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் மவுண்ட் பேட்டன் எங்கிருந்தார், அவருடைய நிகழ்ச்சி நிரல் என்ன என்பதும் தெளிவாக விளக்கப்பட்டு இருக்கிறது.

அதிலிருந்து சில பகுதிகளை சுட்டிக்காட்ட விரும்புகிறோம் "பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் சுதந்திரம் வழங்கப்பட இருந்த ஆகஸ்ட் 14 மற்றும் 15 ஆகிய தேதிகளில் மவுண்ட் பேட்டன் நிகழ்ச்சி நிரல் என்ன என்பது குறித்து 1947 ஜூலை 10 அன்று முடிவு செய்யப்பட்டு விட்டது. பிரிட்டனின் சவுதாம்ப்டன் பல்கலைக்கழகத்தில் இது தொடர்பான ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன" ஆவணங்களின் படி மவுண்ட் பேட்டன் ஆகஸ்ட் 14 டெல்லியில் இருந்து காலை 7 மணிக்கு புறப்பட்டு காலை 11:30 மணிக்கு கராச்சியை அடைந்தார். பாகிஸ்தானின் முதல் சுதந்திர தினத்தை முடித்துக் கொண்டு அங்கிருந்து மாலை 3:30 மணிக்கு புறப்பட்டு இரவு 7 மணிக்கு டெல்லி வந்தடைந்தார். அதன் பிறகு ஆகஸ்ட் 15ஆம் தேதி காலை 10 மணிக்கு தான் இந்திய சுதந்திர தின விழாவில் பங்கேற்கிறார். இடையில் இரவு 11:45 மணிக்கு செங்கோலைப் பெற்று புனித நீர் தெளித்து நேருவிடம் கொடுத்ததாக எந்த வரலாற்று தகவலும் இல்லை, ஆட்சி மாற்றத்தின் குறியீடாக பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடி இறக்கப்பட்டு தேசியக்கொடி ஏற்றப்பட்டது இதுதான் நடந்தது.

அதேபோல் ஆகஸ்ட் 22, 1947 இல் அமெரிக்காவில் நியூயார்க் நகரில் இருந்து வெளிவந்த டைம்ஸ் பத்திரிக்கை இது குறித்து விரிவான செய்திகளை பதிவு செய்து இருக்கிறது. அதிலும் ஆட்சி மாற்றத்தின் அடையாளமாக மவுண்ட் பேட்டனுக்கு செங்கோல் தரப்பட்டது பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. தமிழ்நாட்டில் இருந்து வந்த மடத்தின் தூதுவர்கள் மற்றும் நாதஸ்வர வித்துவான் டி.என். இராஜரத்தினம் பிள்ளை நாதஸ்வர இசையுடன் ஊர்வலமாக சென்று நேரு வீட்டில் அவரிடம் செங்கோலை வழங்கினார்கள், நேருவின் நெற்றியில் விபூதி பூசினார்கள் என்றுதான் டைம்ஸ் பத்திரிக்கை செய்தி வெளியிட்டு இருக்கிறது.

டைம்ஸ் ஆப் இந்தியா நாளேட்டில் (ஜூன் 29,2023) அருண் ராம் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். ராஜாஜியின் பேரன் ராஜ்மோகன் காந்தி ராஜாஜியின் சுயசரிதையை எழுதியவர். ராஜாஜியிடம் இப்படி ஒரு பணி ஒப்படைக்கப்பட்டது குறித்தோ ராஜாஜி தான் இந்த செங்கோலை வழங்குவதற்கு திருவாடுதுறை ஆதீனத்திடம் பேசினார் என்பதற்கோ ஆதாரங்கள் ஏதுமில்லை, அப்படிப்பட்ட தகவல் தங்களுக்கு தெரியாது என்று ராஜ்மோகன் காந்தி கூறுகிறார்.

ஆனால் ஆளுநர் ரவி போன்றவர்கள் கற்பனையாக சில கதையை உருவாக்குகிறார்கள் கடந்த 2022 ஏப்ரல் 19ஆம் தேதி ஆளுநர் திருவாடுதுறை மடத்திற்குப் போய் இந்த செங்கோல் பிரச்சனை குறித்து சில செய்திகளை சொல்லிவிட்டு வந்து இருக்கிறார். திருவாடுதுறை ஆதீனம் தற்போது இதுகுறித்து நூல் ஒன்றை வெளியிட்டு இருக்கிறது அதில் ஆளுநர் தங்களை நேரில் வந்து சந்தித்ததை பதிவு செய்து இருக்கிறது. ஆளுநருக்கு ஆலோசர்களாக இருக்கிற சில பார்ப்பனர்கள் சொல்லிய கதையை மடத்திடம் கூறி இந்த திரைக்கதை வசனத்தை எழுதி தயாரித்து டெல்லிக்கு தந்தவர் தமிழக ஆளுநர் தான் என்பதும் இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. ஆதீனம் வெளியிட்ட இந்த நூலிலும் கூட மவுண்ட் பேட்டனிடம் செங்கோல் வழங்கப்பட்டது குறித்து எந்தவொரு புகைப்படமும் இடம் பெறவில்லை, தமிழ்நாட்டில் ஆளுநர் மாளிகையில் உட்கார்ந்து கொண்டு ஆளுநர் ரவி எத்தகைய அரசியலை நடத்திக் கொண்டிருக்கிறார், எவ்வளவு பொய்யான வரலாறுகளையும் புனை சுருட்டுகளையும் உருவாக்கிக் கொண்டு இருந்திருக்கிறார் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

# பாலியல் குற்றச்சாட்டுக்குள்ளான பாஜக எம்பி மீது 40 கிரிமினல் வழக்குகள்

பாலியல் குற்றசாட்டுக்குள்ளான பாஜக எம்பி பிரிஜ் பூஷண் சரண் சிங்கை கைது செய்யாமல் – பாஜக ஆட்சி காப்பாற்றி வருகிறது. பாதிக்கப்பட்ட மல்யுத்த வீராங்கனைகள் தொடர்ந்து போராடுகிறார்கள். புதிய நாடாளுமன்றத்தின் முன்பு போராடச் சென்ற வீராங்கனைகளை காவல்துறை குண்டுக்கட்டாக தூக்கி கைது செய்தனர்.


மல்யுத்த வீரர் - வீராங்கனைகளை குண்டுக் கட்டாக தூக்கி கைது செய்த சம்பவத்திற்கு தில்லி மகளிர் ஆணையத் தலைவர் ஸ்வாதி மலிவால் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும் பிரிஜ் பூஷண் சரண் சிங்கை உடனடியாக கைது செய்யுமாறு தில்லி போலீஸ் கமிஷனர் சஞ்சய் அரோராவிற்கு கடிதம் எழுதி உள்ளார். அக்கடிதத்தில், “இந்திய மல்யுத்தக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த போது நாடாளுமன்ற உறுப்பினர் பிரிஜ் பூஷண் சிங் மீது ஒரு சிறுமி உட்பட பல மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் குற்றச்சாட்டுகளை முன் வைத்தனர். குற்றம்சாட்டப்பட்டவர் மீது ஏற்கனவே 40 கிரிமினல் வழக்குகள் உள்ள நிலையில், உச்சநீதிமன்றம் தலையிட்டு 2 எப்.ஐ.ஆர்கள் பதிவு செய்யப்பட்டாலும், தில்லி காவல்துறை பிரிஜ் பூஷணை இன்றுவரை கைது செய்யவில்லை. இதனால் மல்யுத்த வீராங்கனைகள், அவர்களுக்கு ஆதரவாக வீரர்களும் ஜந்தர் மந்தரில் கடந்த ஒரு மாதமாக தொடர்ந்து போராட்டம் நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தில்லியில் ஒவ்வொரு நாளும் 6 பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவாகின்றன. ஒவ்வொரு வழக்கிலும், குற்றம் சாட்டப்பட்ட நபரைக் கைது செய்ய தில்லி காவல்துறை முயற்சிக்கிறது. ஆனால் ஏன் பிரிஜ் பூஷண் சிங் இன்றுவரை கைது செய்யப்பட வில்லை? இது அப்பட்டமான அநீதி இல்லையா? குற்றம் சாட்டப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு பகிரங்கமாகவே ஆதரவாக செயல்படும் தில்லி காவல் துறையின் பாகுபாடான அணுகுமுறை நீதியை கேலிக் கூத்தாக்கியது. மேலும் மல்யுத்த வீராங்கனைகளை தில்லி தெருக்களில் உட்கார வைக்கிறது. முன்னெப்போதும் இல்லாத வகையில், மல்யுத்த வீராங்கனைகள் அவர்களது குடும்பத்தினருடன், தில்லி காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மல்யுத்த வீராங்கனைகள் சாக்சி மாலிக், வினேஷ் போகத் மற்றும் சங்கீதா போகத் இந்த நாட்டின் ஹீரோக்கள் மற்றும் சாம்பியன்கள் என் பதை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராக குரல் எழுப்பியதற்காக அவர்களுக்கு நீதியை மறுப்பதன் மூலம், வலுக் கட்டாயமாக காவலில் வைப்ப தன் மூலம், தில்லி காவல்துறை நாட்டின் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு பாலியல் துன்புறுத்தல் வழக்குகளுக்கு எதிராக புகார் அளிப்பதற்கும் நீதிக்காகப் போராடுவதற்கும் எதிராக மனச் சோர்வை அளிக்கிறது.

பிரிஜ் பூஷண் சரண் சிங் கைது செய்யப்பட்டு, மல்யுத்த வீராங்கனைகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்” என்று கூறியுள்ளார்.

## பழந்தமிழர் பெருமை தேவையில்லை



வீணாகப் பழந்தமிழர் கொள்கை என்பதும், பழந்தமிழர் வாழ்க்கை நிலை என்பது அந்நியனை ஏய்க்கவோ, அறியாமையில் மூழ்கவோ தான் பயன்படக்கூடியதாக ஆகிவிட்டன. இனி நம்முடைய எந்த சீர்திருத்தத்திற்கும் அந்தப் பேச்சு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பகுத்தறிவுவாதியின் கடமையாகி விட்டது.

பழந்தமிழன் வந்து போதிக்கத் தகுந்த நிலையில் இன்று நமது சமூகம் இல்லை. பழந்தமிழன் கொள்கை எதுவும் இன்று எந்த மனித சமூகத்திற்கும் அவசியமும் இல்லை. மனிதன் காலத்தோடு, மாறுதலோடு செல்ல வேண்டியவனே ஒழிய வேறில்லை. வேண்டுமானால் மடையர்களைத் தட்டி எழுப்ப ஒரு ஆயுதமாக அதைக் கொள்ளலாம். ஆனால் சாது மக்களை ஏமாற்ற அதை பயன்படுத்திவிடக் கூடாது என்பதோடு அவ்வளவு மடையர்களாகவும் நாம் இல்லை. இன்று நம் பண்டிதர் பலருக்குப் பகுத்தறிவு இல்லாமல் போனதற்கு காரணமே பழந்தமிழர் வாழ்க்கை, பழங்கொள்கை பேச்சைப் பேசி இனி ஆக வேண்டிய காரியம் எதுவும் இல்லை


ஆதலால், பொதுமக்கள் பழந்தமிழர் கொள்கைப் பேச்சுப் பித்தலாட்டத்திற்கு இடங்கொடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கிய கடமையாகும். அன்றியும் பழந்தமிழர் கொள்கை என்பது விவகாரத்திற்கு இடமாய்விட்டது.

குடிஅரசு 10.1.1943

# சனாதனத்தின் கொடூர வரலாறு (3)

# சுயமரியாதை திருமண சட்டத்தில் பெரியார் தந்த திருத்தம்

*தொகுப்பு : விடுதலை இராசேந்திரன்*




1954 : தீண்டப்படாதார் கோயில் நுழைவு உரிமையை பார்ப்பனர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். காசி விசுவநாதன் கோயிலில் தீண்டப்படாதவரை அனுமதிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்த பார்ப்பனர்கள் அவர்களுக்கென்று தனி வழி ஒன்றை உருவாக்கி அந்த வழியாக மட்டும்தான் கோவிலுக்குள் நுழைய வேண்டும் என்று கூறினார்கள். ஏனைய பிற சாதி பக்தர்களோடு கலந்து அவர்கள் கோவிலுக்குள் வரக்கூடாது என்று பெரும் போராட்டத்தை நடத்தினர்.

1955 : தீண்டாமையை ஒழித்து சட்டம் கொண்டுவரப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதை அமுல்படுத்துவதற்கு இந்திய அரசு சட்டமேற்றியது. அந்த சட்டத்தில் அம்பேத்கர் தெரிவித்த பல கருத்துகளை புறக்கணித்தது.

1956 பம்பாய் சட்டமன்றம் கோயில் நுழைவுக்கு ஒரு சட்டம் இயற்றியது, சுவாமி நாராயணன் பரம்பரை என்ற ஒரு பிரிவினர் யாரை கோவிலுக்கு விடலாம் என்கின்ற உரிமை தங்களுக்கு உண்டு என்று உரிமை கோரி சில பிரிவினருக்கு அனுமதி மறுத்து கோயிலை மூட உரிமை தங்களுக்கு உண்டு என்று வாதிட்டனர். இதை எதிர்த்து பம்பாய் சட்டமன்றத்தில் இந்த சட்டம் கொண்டுவரப்பட்டது.

1966 : சுவாமி நாராயணன் பரம்பரையினர் பம்பாய் சட்டமன்றம் இயற்றிய சட்டத்தை எதிர்த்து டெல்லி உச்சநீதிமன்றம் போனார்கள். உச்சநீதிமன்றம் அவர்களுடைய கோரிக்கையை நிராகரித்தது, தீண்டப்படாதவர்கள் இந்துக்களே அல்ல என்று சாமி நாராயணன் பரம்பரையினர் உச்சநீதிமன்றத்தில் வாதிட்டனர். உச்ச நீதிமன்றம் இந்த கருத்தை ஏற்க மறுத்தது, அரசியல் சட்டம் தீண்டப்படாதவர்களை இந்துக்கள் என்று அங்கீகரிக்கிறது என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

1967 : தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்த அறிஞர் அண்ணா சுயமரியாதை திருமணத்திற்கு பின் தேதியிட்டு உரிமைகளை வழங்கி சட்டம் கொண்டு வந்தார். புரோகிதர்கள் இல்லாமல் மாலை மாற்றிக் கொள்ளலாம் அல்லது தாலி கட்டிக் கொள்ளலாம். புரோகிதர்கள் இல்லாத திருமணம் செல்லும் என்ற புரட்சிகரமான சட்டமே சுயமரியாதை திருமண சட்டம். இந்த மசோதாவை சட்டசபையில் தாக்கல் செய்வதற்கு முன்பு பெரியாரின் பரிசீலனைக்கு அண்ணா அனுப்பி வைத்தார், மசோதாவை ஆழ்ந்து படித்த பெரியார் அதில் இடம்பெற்றுள்ள ஒரு முக்கியமான கருத்துக்கு திருத்தம் ஒன்றை தந்தார் சுயமரியாதை திருமணம் என்பதற்கான விளக்கமாக அந்த மசோதாவில் தாலி கட்டிக் கொண்டு மாலை மாற்ற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. பெரியார் தாலி கட்டிக் கொள்ளலாம் அல்லது மாலை மாற்றிக் கொள்ளலாம், இரண்டில் ஏதாவது ஒன்றை செய்தால் போதும் என்ற திருத்தத்தை பெரியார் முன் வைத்தார். அண்ணா அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு பெரியாரின் அறிவுக் கூர்மையை வியந்து பாராட்டினார். படித்த தங்களுக்கே புரியாத பிரச்சனையை பள்ளிப் படிப்பு மட்டுமே படித்த பெரியார் எப்படி கண்டறிந்து பாருங்கள் என்று வியந்தார்.

1968 : கீழ் வெண்மணியில் 42 தாழ்த்தப்பட்ட மக்கள் கூலி உயர்வு போராட்டத்திற்காக உயிருடன் கொளுத்தப்பட்ட கொடுமை அரங்கேறியது.

1969 : தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை மறு பரிசீலனை செய்வதற்காக நாடாளுமன்றத்தில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்த குழு 1954 இல் அம்பேத்கர் முன்வைத்த பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டது.

1973 : சென்னை உயர்நீதிமன்றம் கீழ் வெண்மணி எரிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்து தீர்ப்பு அளித்தது. இவர்கள் அனைவரும் வசதி படைத்தவர்கள் அவர்கள் குடிசைக்கு சென்று தீ வைத்திருப்பார்கள் என்று நம்ப முடியாது என்று உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியது.

1976 : தீண்டாமை ஒழிப்பு சட்டத்தில் 1954 இல் அம்பேத்கர் கூறிய பரிந்துரைகளை ஏற்று அதை தீண்டாமை ஒழிப்பு சட்டத்தோடு இணைத்து இந்திரா காந்தி சட்டமியற்றினார்.

1977 : பீகார் மாநிலம் பெல்சி கிராமத்தில் நிலமற்ற பஸ்வான் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் நில உடமையாளரான குர்மி சாதியினருக்கும் இடையே நடந்த சாதி மோதலில் 11 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 8 பேர் தீண்டப்படாத வகுப்பைச் சார்ந்தவர்கள். மொரார்ஜி தேசாய் அரசாங்கம் இது சாதி மோதல் அல்ல, இரு குழுவினருக்கு இடையே நடந்த மோதல் என்று கூறி சாதி பிரச்சினையை திசை திருப்ப பார்த்தது. தாழ்த்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேரில் பெல்சி சென்று உண்மைகளை அறிந்து விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தது. சாதியே பிரச்சனைகளுக்கு காரணம் என்று அது தெளிவுபடுத்தியது. அதைத் தொடர்ந்து அன்றைக்கு அதிகாரத்தில் இல்லாத இந்திரா காந்தி பெல்சி கிராமத்திற்கு சென்று கொட்டும் மழையில் யானை மீது ஏறி சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார். இந்திரா காந்தியின் மறு அரசியல் பிரவேசத்திற்கு இந்த நிகழ்வு பெருமளவில் உதவியது.

1982 : பெல்சி சாதி கலவர வழக்கில் உச்சநீதிமன்றம் இரண்டு பேருக்கு தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. அதில் ஒருவர் இரண்டு தலித்துகளை கொலை செய்தவர்.

1983 : உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து மகாபீர் மத்தூர் என்பவர் தூக்கிலிடப்பட்டார். இந்தியாவில் முதன் முதலாக தீண்டப்படாத மக்களை கொலை செய்தவருக்கு வழங்கப்பட்ட தண்டனை தூக்கு தண்டனை இதுதான்

1987 : ராஜஸ்தானில் ராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்த ரூப் கண்வார் என்ற பெண் கணவன் இறந்த நெருப்பில் உயிரோடு எரிக்கப்பட்டார். சதி என்ற கொடூரமான இந்துப் பழக்க வழக்கத்தின் தொடர்ச்சியாக இந்த எரிப்பு நடந்தது. நாடு முழுதும் கடும் எதிர்ப்பலைகள் எழுந்தன, ராஜீவ் காந்தி சதி என்பது கொலை குற்றம் அதில் ஈடுபடுகின்றவர்களுக்கு மரண தண்டனை என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்

1989 : தீண்டாமை கொடுமைகளை கண்டிக்கும் சட்டத்தை கடுமையாக்கி வன்கொடுமை தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

1990 : உச்சநீதிமன்றம் கீழ் வெண்மணி கொலை குற்றத்தில் ஈடுபட்ட அனைவரையும் விடுதலை செய்தது.

1991 : ஆந்திர மாநிலத்தில் சுந்தூர் கிராமத்தில் 8 தலித் மக்கள் தலையை வெட்டி கொடூரமாக கொலை செய்யப்பட்டார்கள். இதற்காக சிறப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டு விசாரணை நடந்தது தலித் மக்கள் மீதான கொடுமைக்காக சிறப்பு விசாரணை நீதிமன்றம் அமைக்கப்பட்டது இந்தியாவிலேயே இதுதான் முதல் முறை. 1989 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் இந்த சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

1996 : பீஹார் மாநிலத்தில் ரன்வீர் சேனா என்ற பூமிகார் சாதி அமைப்பு பதோனி தோலா என்ற ஊரில் 20 பேரை கொலை செய்தது இதில் பெரும்பாலோர் தலித் சிலர் முஸ்லிம்கள் இதில் ஒருவரைத் தவிர கொல்லப்பட்ட மற்ற அனைவரும் பெண்கள் குழந்தைகள்.

1997 : பீகாரில் லக்ஷ்மன்பூர் பதே என்ற கிராமத்தில் ரன்வீர் சேனா என்ற ஜாதி வெறி அமைப்பு 58 தீண்டப்படாத மக்களை வெட்டிக் கொன்றது. இந்தியாவிலேயே சாதி வன்முறையில் மிக அதிக எண்ணிக்கையில் தலித் மக்கள் கொல்லப்பட்ட நிகழ்வு இதுதான் குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர்.நாராயணன் இது தேசிய அவமானம் என்று கூறினார் .

1997 : பம்பாயில் அம்பேத்கர் சிலை சேதப்படுத்தப்பட்டதை எதிர்த்து போராடிய தலித் மக்கள் மீது காவல்துறை சுட்டதில் 10 பேர் இறந்தனர் பம்பாய் நகரில் இந்த சம்பவம் நடந்தது

1998 : ராம் பாய் நகரில் நடந்த துப்பாக்கி சூடு பற்றி விசாரணை நடத்திய குழு காவல்துறை துறை ஆய்வாளர் மனோகர் கதாம் என்பவர் மீது குற்றம் சுமத்தியது தேவையே இல்லாமல் கண்மூடித்தனமாக அவர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தினார் என்று விசாரணை ஆணையம் அறிவித்தது.

1999 : ரன்வீர் சேனா 23 தலித் மக்களை கொன்றுக் குவித்தது. இதில் 24 பேர் மீது பீகார் காவல்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது

2002 : ஹரியானாவில் பசுமாட்டை ஏற்றிச் செல்கிறார்கள் என்ற உண்மைக்கு மாறான குற்றச்சாட்டின் அடிப்படையில் ஒரு கும்பல் ஐந்து தலித் மக்களை கொலை செய்தது. அங்கே இருந்த காவல்துறை இந்த கொலையை தடுப்பதற்கோ பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கோ முன் வரவில்லை.

2006 : மகாராஷ்டிராவில் கைராலஞ்சி என்ற இடத்தில் தலித் குடும்பத்தைச் சார்ந்த நான்கு பேரை வீட்டில் இருந்து வெளியே இழுத்து வந்து கொடூரமாக ஒரு கும்பல் கொலை செய்தது. அதில் ஒரு தாயாரும் அவரது வயது வந்த மகளும் அடங்குவர் அவர்களது உடல் நிர்வாணமாக்கப்பட்டு அருகே இருந்த ஒரு கால்வாயில் வீசப்பட்டது இது குறித்து அமைக்கப்பட்ட விசாரணை ஆணையம் இது திட்டமிட்ட சதி இந்த வழக்கில் சாட்சியங்களையும் உண்மைகளையும் மறைப்பதற்கு மிக பெரும் சதி நடந்து இருக்கிறது என்று கூறியது.

2009 : ராம் பாய் நகர் துப்பாக்கி சூடு வழக்கில் விசாரணை நீதிமன்றம் காகம் என்ற காவல்துறை துறை ஆய்வாளர் மீதான குற்றச்சாட்டை ரத்து செய்து அங்கே நடந்தது கொலை அல்ல தற்கொலை தான் என்று கூறியது கொடூரமான துப்பாக்கிச் சூட்டை நடத்திய அந்த துணை ஆய்வாளர் உடனடியாக பிணையில் பம்பாய் உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

2010 : ஹரியானாவில் பசுமாட்டை ஏற்றிச் செல்கிறார்கள் என்ற பொய்யான குற்றச்சாட்டில் ஐந்து பேரை ஒரு கும்பல் கொலை செய்த வழக்கில் விசாரணை நீதிமன்றம் ஏழு பேருக்கு ஆயுள் தண்டனை விதித்தது அதில் ஒருவர் தலித். நீதிமன்றம் தனது தீர்ப்பில் கொலை செய்தவர்கள் பசுமாட்டை ஏற்றி வந்தவர்கள் தலித் என்பது தெரியாது என்று கூறியது.

2012 : உயர் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட 23 பேரையும் விடுதலை செய்தது விசாரணை நீதிமன்றம் இவர்களை குற்றவாளிகள் என்று ஏற்கனவே அறிவித்து இருந்தது இதில் மூன்று பேருக்கு தூக்கு தண்டனையும் வழங்கப்பட்டு இருந்தது பம்பாய் உயர் நீதிமன்றம் அனைத்து தண்டனைகளையும் ரத்து செய்தது

2013 : லட்சுமண்பூர் பதே வழக்கில் பாட்னா உயர்நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட 26 பேரையும் விடுதலை செய்தது. இதில்16 பேர் சிறப்பு விசாரணை நீதிமன்றத்தால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்கள்.

2016 : ஆந்திர மாநிலம் சுதூர் வழக்கில் விசாரணை நீதிமன்றம் குற்றம் சாட்டிய 53 பேரையும் ஆந்திர உயர்நீதிமன்றம் விடுதலை செய்தது.

2019 : கைரலாஞ்சி சாதி கலவர வழக்கின் உச்ச நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட எட்டு பேருக்கு ஆயுள் தண்டனை விதித்தது. அதே நேரத்தில் இதில் சாதி பிரச்சனை ஏதும் இல்லை என்றும் உச்சநீதிமன்றம் கூறியது.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கோவை - சென்னை மாவட்டக் கழக கலந்துரையாடல்

# மாநாட்டுத் தீர்மானங்களை செயல்படுத்த — தோழர்கள் தீவிரம்

சென்னை மாவட்ட கலந்துரையாடல் கூட்டம், 28.05.2023 ஞாயிறு மாலை 6 மணியளவில், முருகேசன் திருமண மண்டபத்தில் சென்னை மாவட்ட செயலாளர் இரா.உமாபதி தலைமையில் நடைபெற்றது.

கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் நோக்கவுரையாற்றினார். மாவட்டத் தலைவர் வேழவேந்தன் முன்னிலை வகித்தார்.

• நிகழ்வில் சேலத்தில் நடைபெற்ற மாநாட்டிற்கான வரவு செலவு கணக்குகள் குறித்தும்

• செயலவையில் இயற்றப்பட்ட தீர்மானம் குறித்தும்

• "எது திராவிடம்! எது சனாதானம்!" சென்னையில் 200 தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் அன்பு தனசேகரன், கரு.அண்ணாமலை உட்பட்ட சென்னை மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள், பகுதி கழகப் பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

கோவை மாவட்ட தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் 25.5.2023 அன்று கோவை இரயில் நிலையம் அருகேயுள்ள வழக்கறிஞர் கார்கி அலுவலகத்தில் மாலை 5 மணிக்கு கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கலந்துரையாடல் கூட்டத்திற்கு பணிச்சூழல் காரணமாக வர முடியாத தோழர்கள் தங்கள் ஆலோசனைகளை வாட்சப் மூலமாக தெரிவித்ததன் அடிப்படையிலும் கலந்து கொண்டவர்கள் கூறிய ஆலோசனையின் படியும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

• கோவை கழகத் தோழர்கள் ஆதரவாளர்களையும் நண்பர்களையும் சந்தித்து ரூ.98,700 நன்கொடை பெற்று மாநாட்டின் செலவுகள் போக ரூ.47,736 மீதம் செய்து சேலத்தில் 25.5.2023 அன்று நடைபெற்ற செயலவைக் கூட்டத்தில் ஒப்படைத்துவிட்டு பிரச்சார பணிகளுக்கு ஒலிப்பெருக்கி வாங்கிட தலைமையிடம் ரூ.7736 பெற்றுக் கொண்டு ரூ.40,000 - யை தலைமையிடம் ஒப்படைத்தமைக்கும் மாநாட்டு பணியை கோவை பகுதியில் சிறப்பாக செய்தமைக்காக கோவை கழகத்தினருக்கு இக்கூட்டம் பாராட்டுக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது.

• நடந்து முடிந்த இது தமிழ்நாடு! இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநில மாநாட்டை மாற்று அமைப்பினரும், அமைப்பு சாராத தோழமையினரும் பாராட்டும் அளவுக்கு வெகு சிறப்பாகவும் கடுமையாகவும் செயல்பட்ட தோழர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்தி மகிழ்வுடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

• "எது திராவிடம்? எது சனாதனம்?" விளக்கத் தெருமுனை கூட்டங்களை கோவை மாநகரம், சூலூர், மேட்டுப்பாளையம், கிணத்துக்கடவு, அன்னூர், சுல்தான்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் 25 கூட்டங்களை சிறப்பாக நடத்தி முடிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

• செயலவையில் நிறைவேற்றிய ஜாதி தீண்டாமை கொடுமைகள் பட்டியலை நண்பர்கள், தோழமை அமைப்பினர் உதவியுடன் ஒவ்வொரு பகுதிக்கும் நேரில் சென்று தெளிவான ஆதாரங்களுடன் பட்டியல் தயார் செய்து ஜூன் 15-க்குள் 50 சதவீத பகுதிகளையும் ஜூன் 25-க்குள் 100 சதவீத பகுதிகளையும் முடிப்பது என்றும் தலைமை அறிவித்த நாட்களில் முதற்கட்டமாக மனுக்களை கொடுப்பது எனவும் இரண்டாம் கட்டமாக ஆர்ப்பாட்டத்தை சிறப்பாக நடத்தி முடிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், மாநகர அமைப்பாளர் நிர்மல்குமார், கிருஷ்ணன், புரட்சித்தமிழன், துளசி, இசைமதி, சதீஷ், நிலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கலந்து கொண்ட அனைவருக்கும் தேநீர் மற்றும் சிற்றுண்டிகளை தோழர் புரட்சித்தமிழன் வழங்கினார்.

# வேதங்கள் அறிவியல் கோட்பாடுகளாம்; இஸ்ரோ தலைவர் உபதேசம்

ஜோதிடத்தை மய்யமாக வைத்து எழுதப்பட்ட வேதங்கள் தான் அறிவியல் கோட்பாடு களின் பிறப்பிடம் என்று இஸ்ரோ தலைவர் எஸ்.சோம் நாத் வேத பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பேசியது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

"அறிவியல்கோட்பாடுகளின்உண்மையானபிறப்பிடமேவேதங்கள்தான். ஆனால், மேற்குலக படைப்பு கள்போல் அவை வேறு போர்வையில் கொடுக்கப்பட் டுள்ளன" என்று சமஸ்கிருத வேத பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் இஸ்ரோ தலைவர் எஸ்.சோம்நாத் கூறியுள்ளார்.

மத்தியப் பிரதேச மாநிலம் உஜ்ஜைனியில் உள்ள மகரிஷி பாணினி சமஸ்கிருத மற்றும் வேதிக் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் அவர் இவ்வாறு பேசியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், "அறிவியல் கோட்பாடுகளின் உண்மையான பிறப்பிடம் வேதங்களே. ஆனால், மேற்குலக படைப்பு கள் போல் அவை வேறு போர்வையில் கொடுக்கப் பட்டுள்ளன. கணிதத்தின் அல்ஜீப்ரா, ஸ்கொயர் ரூட்ஸ், நேரம் தொடர்பான கணக்குகள், கட்டுமானக் கலை, பிரபஞ்சத்தின் கட்டமைப்பு, விமான அறிவியல், உலோக அறிவியல் எனப் பலவற்றிலும் வேதங்களே முன்னோடி.

ஆரம்ப காலத்தில் சமஸ்கிருத மொழிக்கு எழுத்துரு இல்லாமல் பேச்சு வழக்கு மட்டுமே இருந்ததால், அதில் சொல்லப்பட்ட அறிவியல் அபகரிக்கப்பட்டு, மேற்குல கின் தத்துவங்கள் போல் கொடுக்கப்பட்டுள்ளன. பின் னாளில் தேவநாகரி எழுத்துரு வந்தபின்னர் சமஸ்கிருத அறிவு செழித்தோங்கியது.

சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட இந்திய இலக்கியங்கள் வளமானவை. வானியல், மருத்துவம், அறிவியல், இயற்பியல், வேதியியல் மற்றும் வானூர்தி அறிவியல் ஆகியவற்றின் கண்டுபிடிப்புகள் சமஸ்கிருதத்தில் எழு தப்பட்டன. இதற்கு சூர்ய சித்தாந்தமே எடுத்துக்காட்டு. என் கல்விப் பருவத்தில், சூரிய குடும்பம், கால அளவு மற்றும் பூமியின் அளவு மற்றும் சுற்றளவுப்பற்றி பேசும் சமஸ்கிருத புத்தகத்தால் ஈர்க்கப்பட்டே அது தொடர்பாக நான் படித்தேன்" என்று அவர் கூறியுள்ளார். இவர் கூறும் "சமஸ்கிருத சூரிய சித்தாந்தம்" நூல் கூறுவது என்ன? சமஸ்கிருத சூரிய சித்தாந்தம் ஜோதிடத்தை அடிப்படையாகக் கொண்டது. ஜோதிடத்தில் பூமிதான் முக்கியமானது, அதில் சூரியன்கூட கோள் தான், அதுமட்டுமல்லாமல் இல்லாத கற்பனைக் கோள்களான ராகு கேதுக்கள் உள்ளன. சூரியனுக்கு மனைவிகள் கூட உள்ளதாக அந்த சமஸ்கிருத சூரிய சித்தாந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப் படித்துத் தான் வானவியல் அறிவியல் தொடர்பாக ஈர்க்கப்பட்டேன் என்று இஸ்ரோ தலைவர் கூறியிருப்பது நகைப்பிற்கும், வெட்கத்துக்கும் உரியதே!

"புரட்சிப் பெரியார் முழக்கம்"

ஆண்டுக் கட்டணம் ரூ.300

தொடர்புக்கு : ஆசிரியர், 15, தோழமை,
வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி,
சென்னை - 600096
தொடர்புக்கு : 8973341377

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : June 02, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran